புதுச்சேரி அரசு
தொழிலாளர் துறை

புதுச்சேரி, நாள் 29-1-2013

பத்திரிக்கைச் செய்தி

ஷஷஷ

புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள அனைத்து தொழிற்சாலைகள், நிறுவனங்கள், உணவகங்கள், கட்டடம் மற்றும் கட்டுமான நிறுவன உரிமையாளர்களின் கவனத்திற்கு.

மாநிலங்களுக்கிடையே புலம் பெயரும் தொழிலாளர்கள் (தொழில் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் பணி வரையறை) சட்டம், 1979 என்ற மத்திய சட்டத்தின்படி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் மாநிலங்களுக்கிடையே புலம் பெயரும் தொழிலாளர்கள் (தொழில் ஒழுங்குமுறை விதிகள் மற்றும் பணி வரையறை)-விதிகள், 2012, 5/12/12 தேதியிட்ட அரசிதழில் (எண்.48) வெளியிடப்பட்டு அமுலுக்கு வந்துள்ளது.

மேற்கண்ட விதிகளின்படி, புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலுள்ள நான்கு பிராந்தியங்களிலும் (புதுச்சேரி, காரைக்கால், மாஉேற மற்றும் யானாம்) புலம் பெயர்ந்துள்ள தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் மற்றும் சலுகைகள், அவர்களுக்கும் கிடைத்திட, அவர்களைப் பணியில் அமர்த்தும் நான்கு பிராந்தியங்களிலும் அமைந்துள்ள தொழிற்சாலைகள், நிறுவனங்கள், உணவகங்கள், கட்டடம் மற்றும் கட்டுமான நிறுவன உரிமையாளர்கள் அனைவரும் தங்களை புதுச்சேரியிலுள்ள தொழிலாளர் துறை, துணை ஆணையர் அலுவலகத்தில் பதிவு செய்துகொள்ள வேண்டும். பதிவுக்கான விண்ணப்பத்தை (படிவம்-I), தொழிலாளர் துறையின் இணைய தளத்திலிருந்து (http://labour.pondicherry.gov.in) பதிவிறக்கம் செய்து கொள்ளவும்.

புதுச்சேரி, மாஉேற மற்றும் ஏனாம் பகுதியில் அமைந்துள்ள தொழிற்சாலைகள், நிறுவனங்கள், உணவகங்கள், கட்டடம் மற்றும் கட்டுமான நிறுவன உரிமையாளர்கள் அனைவரும் தங்கள் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை புதுச்சேரி தொழிலாளர் துறையில், தொழிலாளர் அதிகாரி (அமலாக்கம்) அலுவலகத்திலும், காரைக்கால் பகுதியிலுள்ளவர்கள் காரைக்கால் தொழிலாளர் அதிகாரி அலுவலகத்திலும், அதற்குண்டான தொகையைச்

...2/-

செலுத்தி உரிமம் பெற்றுக் கொள்ளவும். மேலும், தொழிலாளர் துறையின் அனுமதி இல்லாமல், புலம் பெயர்ந்த பிற மாநிலத் தொழிலாளர்களை பணியில் அமர்த்தினால் அரசு சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

எனவே, புதுச்சேரி மாநிலத்திலுள்ள அனைத்து தொழிற்சாலைகள், நிறுவனங்கள், உணவகங்கள், கட்டடம் மற்றும் கட்டுமான நிறுவன உரிமையாளர்கள் அனைவரும் உடனே தங்கள் நிறுவனங்களை மேற்படி விதிகளின்படி பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(G. ஸ்ரீநிவாஸ்)
தொழிலாளர் ஆணையர்.